## இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் - 2023
--------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி ஒவ்வொரு மூன்று முதல் ஆறு வருடங்களுக்கு | தற்போதைய நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக பல்கலைக்கழகத்தால் செலுத்த முடியாத ஏறத்தாழ ரூபா 9.0 மில்லியன் தொகையான உடன்படிக்கைகளுடன் சேவைக்காக செலுத்த வேண்டிய மதிப்பீட்டுக் கட்டணத்தை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகம் 2011 முதல் ரூபா 450,330,000 மொத்தக் கிரயத்தையுடைய ஐந்து காணித் துண்டுகளை மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை. | சுட்டிக்காட்டி இது தொடர்பாக மாவட்ட மதிப்பீட்டாளரிடமிருந்து ஒரு கடிதம் பெறப்பட்டது, எனினும், இப்பணியை பூர்த்தி செய்வதற்கு தேவையான நிதிகளை எதிர்காலத்தில் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மல்வத்தை அக்ரோரெக் (Agrotech) பூங்காவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் ரூபா 8,141,358 தொகையான பூர்த்தி செய்யப்பட்ட கூறை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை, இது நடைமுறை வேலையில் சேர்க்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் 19 கூறுகளில், 4 சிறிய கூறுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த கூறுகளை தனித்தனியாக மூலதனமாக்குவது பொருண்மையானது அல்ல. செயற்திட்டம் முழுமையாக பூர்த்தியடைந்ததும், முழு செயற்திட்டமும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்படும். | பூர்த்திசெய்யப்பட்ட கூறுகளை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2019 யூலை 19 ஆம் திகதிய 04/2019 ஆம் இலக்க UGC சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவு | ரூபா 124,601,767 கூட்டுமொத்தமான நிலையான வைப்புக்களை மேற்கொள்வதற்கு நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மீதமுள்ள அனைத்து நிலையான வைப்புக்களுக்கும் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு UGC மற்றும் வரிசை அமைச்சு மூலம் திறைசேரிக்கு ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனினும், திறைசேரியிலிருந்து பதிலுக்காக நாங்கள் இன்னும் காத்திருக்கிறோம். | நிதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி.) | | | |
| (i) | நி.பி. 103(1) | 2023 ஆம் ஆண்டுக்கான பொருள் மெய்மையாய்வு | ஒலுவில் பல்கலைக்கழக வளாகத்தில் வருடத்தின் | நிதிப்பிரமாணத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபை அறிக்கையின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் 08 பிரிவுகளில் இருந்து தொண்ணூற்று ஆறு பொருட்கள் இழக்கப்பட்டுள்ளன. எனினும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகவே வருடாந்த பொருள் மெய்மையாய்வை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டது. பல்கலைக்கழகத்தின் வழக்கமான செயற்பாடுகள் பல நாட்களுக்குப் பின்னர் இயல்பு நிலைக்குத் திரும்பியது, இதனால் சொத்துக்களை பௌதீக ரீதியாக சரிபார்ப்பதில் குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்பட்டது. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 571 | 03 முதல் 09 வருடங்கள் வரை கணக்குகளில் இருந்த ரூபா 17,080,993 தொகையான பிடிபணம் மற்றும் ரூபா 4,378,800 தொகையான மீளளிக்கத்தக்க வைப்புக்கள் ஆகியன தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளன. | இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ள உரிமை கோரப்படாத தொகைகளை வருமானத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பல்கலைக்கழக விடுதியில் வசிக்கும் 38 கல்விசார் பதவியணியினர் மற்றும் 02 கல்விசாரா பதவியணியினரிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 24,924,953 வாடகை தொகையை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | பல்கலைக்கழக விடுதிகளின் ஒதுக்கீடு மற்றும் பராமரிப்பை நிர்வகிக்கும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்கலைக்கழக பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட விலைவிகிதங்கள் பல்கலைக்கழகத்தின் பதவியணியினர் விடுதிகளில் வசிக்கும் குத்தகைதாரர்களின் மாதாந்த சம்பளத்தில் இருந்து முறையாகவும் உடனடியாகவும் அறவிடப்படுகிறது. | தாபனவிதிக் கோவையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாடகைதாரர்களிடமிருந்து நிலுவையாக உள்ள வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | கல்விசார் மற்றும் நூலக பதவியணியினரின் வருகை மற்றும் புறப்படுதல்கள் | ஒரு பொதுவான நடைமுறையாக, இலங்கையில் உள்ள | தாபன விதிக்கோவை மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதம். | உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டில் ரூபா 851,249,018 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. | அரச பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் புறப்படுதல்கள் பேணப்படுவதில்லை. | சுற்றறிக்கைக ளில் உள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவி ன் 2015 நவம்பர் 17 ஆம் திகதிய 15/2015 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை | 2017/18 முதல் 2020/21 வரையிலான கல்வியாண்டுகளுக்காக நான்கு பீடங்களிலும் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் முடிவுகள் 4 மாதங்கள் முதல் 7 மாதங்கள் வரையிலான காலதாமதத்திற்குப் பின்னர் வெளியிடப்பட்டிருந்தன. இதனால் மாணவர்கள் அவர்களது பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்திருக்கவில்லை. | சில சமயங்களில், ஒன்று அல்லது இரண்டு பாடங்களுக்கான பெறுபேறுகள் சற்று தாமதமாகி வருகிறது. இந்த தாமதத்திற்குக் காரணம், ஏனைய பல்கலைக்கழகங்களின் இரண்டாம் தேர்வாளர்கள், குறிப்பாக தொழில்நுட்பப் பீடம் மற்றும் முகாமைத்துவம் மற்றும் வணிக பீடங்களில் உள்ள பாடங்களுக்கு, அவர்களது மதிப்பெண் பட்டியலைச் சமர்ப்பிப்பதில் தாமதமாகிவிட்டமை ஆகும். இதன் விளைவாக, அனைத்து மதிப்பெண்களும் பெறப்படும் வரை ஒரு அரையாண்டிற்கான தேர்ச்சி பட்டியலை இறுதி செய்ய முடியவில்லை, இதனால் குறிப்பிட்ட பீடங்களுக்கான அரையாண்டு பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுகிறது. | சுற்றறிக்கைக ளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க | 2014 நவம்பர் 01 முதல் 2023 ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் கல்விசாரா பதவியணியினரின் 12 | 2024 ஆம் ஆண்டு முதல் தொடங்கும் திருத்தப்பட்ட UGC தாபன விதிக் | சுற்றறிக்கைய ின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | உத்தியோகத்தர்களுக்கு ரூபா 23,008,525 ஆராய்ச்சி படிகள் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தை பெறாமலும் இடைக்கால அல்லது இறுதி ஆராய்ச்சி அறிக்கையைப் பெறாமலும் செலுத்தப்பட்டுள்ளது. | கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவில் பின்வரும் நடைமுறைகள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. முன்மொழிவின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு எதிரான அதன் முன்னேற்றம் உட்பட ஆராய்ச்சியின் இடைக்கால அறிக்கை ஆராய்ச்சி தொடங்கிய திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் ஆராய்ச்சிக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆராய்ச்சியின் முன்னேற்றத்திற்கு ஏற்ப படி கொடுப்பனவிற்கான தொடக்க திகதியை குழு தீர்மானிக்க வேண்டும். ஆராய்ச்சியின் தீவிரமான நடத்தையின் போது, ஆராய்ச்சி படி அதிகபட்சமாக மூன்று ஆண்டுகள் வரை செலுத்தப்படலாம். | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 52,534,712 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 130,456,831 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 77,922,119 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த வருமானம் அதிகரித்தமை இம் முன்னேற்றத்திற்கான முக்கிய காரணங்களாகும்

### 2.2 முக்கிய செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான பிரயாணம், வழங்கல்கள், பராமரிப்பு, ஒப்பந்த சேவைகள் மற்றும் சுய நிதியிடல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்கலைக்கழகத்தின் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 18 சதவீதம் முதல் 64 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயங்கள் | | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் பதவி வறிதாக்கப்பட்டிருந்த 06 | தாபன பிரிவினால் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு ஏற்கனவே கடிதங்கள் | உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து நிலுவை |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 1,629,655 தொகையான கடன்கள் மற்றும் முற்பணங்கள் 02 முதல் 23 ஆண்டுகள் கடந்த போதிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்டுள்ளன மேலும் சில சட்ட வழக்குகளில் உள்ளன. | மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் சேவை வழங்குநர்கள் தொடர்பாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 2,145,783 தொகையானது 02 ஆண்டுகளுக்கும் மேல் கடந்த போதிலும் தீர்க்கப்படாமல் உள்ளது. | நிலுவையாக உள்ள மீதிகளைத் தீர்ப்பதற்கும், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக உரிமை கோரப்படாத செலுத்தப்படாத நிதியை பல்கலைக்கழக வருமானத்திற்கு மாற்றுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவையாக உள்ள செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2009 முதல் 2023 வரையிலான காலப்பகுதியில் பிணைமுறி உடன்படிக்கைகளை மீறியிருந்த 07 விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 20,687,716 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அவரது/ அவளுடைய பிணைதாரர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள், மாதாந்த சம்பளத்திலிருந்து நிலுவைகளைத் தவணை முறையில் செலுத்துவதற்கும், அவருடைய/ அவளுடைய UPF மற்றும் ஓய்வூதிய மீதிகளை சம்பந்தப்பட்ட விரிவுரையாளர்களிடம் இருந்து அறவிடப்படுவதற்கும் சேமிக்கப்பட்டுள்ளன. | உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 முதல் 2019 வரை இயந்திரவியல் பொறியியல் மற்றும் ஓட்டோமொபைல் பொறியியல் மாணவர்களின் பயன்பாட்டிற்காக ரூபா 50,368,729 பெறுமதியான நான்கு இயந்திர உபகரணங்களை பல்கலைக்கழகம் கொள்வனவு செய்துள்ளது. எனினும், இந்த பொருட்கள் அவற்றின் செயற்பாட்டின் போதாத செயல்விளக்கம், முறையற்ற நிறுவல் போன்ற காரணங்களால் நான்கு முதல் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் உள்ளதுடன் உரிய துறைகளிடம் முறையாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு இயந்திரங்கள் தற்போது செயற்படும் நிலையில் உள்ளதுடன் 2024 நவம்பர் இறுதிக்குள் செயன்முறை பயிற்சியைத் தொடங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. இதேபோன்ற பழுதுகள் மற்றும் சில உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதன் காரணமாக மற்ற இரண்டு இயந்திரங்கள் செயற்படும் நிலையில் இருக்கவில்லை. 2024 நவம்பர் இறுதிக்குள் செயன்முறை பயிற்சியைத் தொடங்குவதற்கு இது உருவாக்கப்பட்டுள்ளது. | விளைவற்ற சொத்துக்களை பயன்தரும் வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 இல் அக்ரோடெக் பூங்காவில் மின்விளக்கு கம்பங்களின் நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 14,275,018 மொத்த கிரயத்தில் ஒப்பந்ததாரர்களுடன் பல்கலைக்கழகம் இரண்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதுடன் 2023 யூன் மாதம் பூர்த்தியடைந்தது. 2023 செப்தெம்பரிற்குள், பல்கலைக்கழகம் ரூபா 69,655,764 (வற் உள்ளடங்கலாக) செலவிட்டிருந்ததுடன் பீடத்தின் பரஸ்பர முடிவுறுத்தல் பரிந்துரைக்கப்படுகிறது விவசாய தொழில்நுட்ப பீடத்தால் பூங்காவை அதன் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்த முடியவில்லை, இதனால் செலவினம் பயனற்றிருந்தது. | 2024 ஆம் ஆண்டளவில் ஒதுக்கப்பட்ட பாதீட்டிற்குள் மீண்டும் கேள்வி கோரப்பட்டு பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பரஸ்பர முடிவுறுத்தல் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு, மீதமுள்ள நிர்மாணப் பணிகளை மேலும் தாமதமின்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |